**தலைப்பு 270 - அம்பாறை மாவட்ட செயலகம்**

---------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பாறை மாவட்ட செயலகதத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பபாடுகளுக்கிணங்க எனது பணிபப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 யூலை 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதறக் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புதத் கங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்ப் தன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கடடுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏறப் டுவதறக் காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கடடுப்பாடு தொடரப்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

-

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடரப்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிபப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடரப்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

### (அ) மீண்டெழும் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இறக்காமம் பிரதேச செயலகத்தில் நிர்மாணமொற்றிக்கான செலவிடப்பட்ட ரூபா 686,138 தொகையானது மூலதனச் செலவின விடயம் 270-1-1-0-2001 இன் கீழ் சாட்டுதல் செய்யப்படாது மீண்டெழும் செலவின விடயம் 270-1-1-0-1303 இன் கீழ் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக கட்டிடங்கள் திருத்த செலவு அந்த பெறுமதியில் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது. | மீண்டெழும் செலவுத் தலைப்பின்கீழ் இது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் இவ்வாறு கணக்கிடப்பட்டது. | புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இவ்வேலைக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் மூலதனச் செலவு விடயத்தில் சாட்டுதல் செய்யப்படல் வேண்டும். |

**(ஆ) மூலதனச் செலவினங்கள்**

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | தமண, அக்கரைப்பற்று மற்றும் நிந்தவூர் பிரதேச செயலகங்களுக்குரிய கட்டிடங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 73,662,621 தொகையால் குறைவாகவும் அத்துடன் மாவட்ட செயலகம் மற்றும் ஆலையடிவேம்பு, இறக்காமம் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகங்களுக்குரிய கட்டிடங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 181,052,927 தொகையால் கூடுதலாக குறிப்பிடப்பட்டு நிதிக்கூற்று கொண்டுவரப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 107,390,306 ஆல் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது. | குறித்த பெறுமதி எதிர்வரும் ஆண்டில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் சரியான மதிப்பீட்டுப் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்குக் காட்டப்படல் வேண்டும் |
| (ii) | மாவட்ட செயலக காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 13,900,000 தொகை குறைவாக நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டில் நடைமுறையல்லாச் சொத்தின் பெறுமதி ரூபா. 13,900,000 ஆல் குறைத்துக்காட்டப்பட்டுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |

**(இ) முற்பணக் கணக்கு மீதி**

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பண இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் வேலை இடை நிறுத்தம், பதவி வெறித்தாக்கல், மரணித்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 08 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை உள்ளவாறு 03 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையான காலம் நிலுவையாக காணப்பட்ட ரூபா 1,546,553 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களினதும் ஆவணங்கள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தும் அதற்குரிய அனுமதி இதுவரை கிடைக்காமையினால் சீர் செய்யவில்லை. | நிலுவையாக உள்ள மீதிகளை தாமதமின்றி அறவிடுதல் வேண்டும். |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

அம்பாறை மாவட்ட செயலகம் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | **சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடு**<br>நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடு ஒன்று நாளாதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறித்த பதிவேடுகள் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு**<br>நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளாதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | **மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு**<br>நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) | **பிணைப் பதிவேடு**<br>நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கிய பிணைப் பதிவேடு நாளாதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**(உ) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம்பெற வேண்டிய போதிலும், அம் மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | | |
| | | ரூபா | | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XIX பிரிவு 5 மற்றும் 5:1 | 355,782 | மாவட்ட செயலகத்திற்குரிய 16 அரச இல்லங்களில் வசிக்கும் குடியிருப்பாளர்களிடமிருந்து வாடகை நிலுவை தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான போதிய விளக்கம் இல்லாத காரணத்தினால் மீளாய்வாண்டில் நிலுவையாக உள்ள தொகை தொடர்பாக பதிலினை தெரிவிக்க முடியாமல் இருக்கின்றது | நிலுவை வாடகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் பிரிவு 261 (3) | 4,869,983 | போதிய பணம் கிடைக்கக் கூடியதாக இல்லாவிட்டால் காசேட்டில் கொடுப்பனவு செய்யப்படலாகாது என்பதுடன் கொடுப்பனவிற்காக காசோலைக்கள் எழுதப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் 08 காசோலைகள் | சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட காசோலைகளில் ரூபா 2,156,263 பெறுமதியான காசோலைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதுடன், பிரதேச செயலகத்தினால் கோரப்பட்ட உரிய | அரச வருமானக் கணக்குக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வரையப்பட்டிருந்தும் இக் காசோலைகள் 2022 ஏப்ரல் 05 ஆந் திகதி வரை விநியோகஸ்தருக்கு வழங்கப்படவில்லை. | பொருட்களை தற்போதைய பொருளாதார சூழ்நிலை காரணமாக விநியோகிக்க முடியாத நிலமை ஏற்புட்டுள்ளதாகவும் அதற்கமைய உரிய காசோலைகள் வைப்புச்செய்யப்பட்டதுடன் இவற்றுள் பயனாளிகளின் பங்களிப்பு தொகை மீளளிக்கப்பட்டு அரச பங்களிப்பு தொகையினை அரச வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (iii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டி- 2006 மற்றும் விசேட பிற்சேர்க்கை- 35 | 5,877,000 | பிராந்திய பெறுகைக் குழுவில் (RPC) பொருட்கள் சேவைகளுக்கான பெறுகை எல்லையானது ரூபா 01 மில்லியன் காணப்பட்ட போதிலும், அந்த எல்லையை விஞ்சி ரூபா 2,175,000 பெறுமதிக்கு உளுந்து தோல் நீக்கும் இயந்திரம் (Black Gram Skin Removing Machine) ஆனது திருக்கோவில் பிரதேச செயலகத்தினாலும் ரூபா 3,702,000 பெறுமதியான மீன் கருவாடு உற்பத்தி இயந்திரங்கள் (Fish Drying Machine)- 30 தமண பிரதேச செயலகத்தினாலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இந் நடைமுறையானது தவறானதென்றும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறு செயற்பட வேண்டாமென பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிகளுக்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

----------------

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

--------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ரூபா 648,748,967 தொகையான கட்டுநிதி கோரப்பட்டிருந்த போதும், ரூபா 453,936,880 தொகையான கட்டுநிதி மாத்திரமே மீளாய்வண்டு இறுதி திகதி வரை கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் கோரப்பட்ட கட்டுநிதி ரூபா 194,812,087 பெறுமதி கிடைக்காதிருந்தமையால் வருடத்திற்குள் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை குறித்த காலத்தினுள் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | கட்டுநிதி விண்ணப்பங்கள் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. | கட்டுநிதி முறையாக முகாமைத்துவம் செய்யப்பட்டு உரிய காலத்தினுள் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

--------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான குறை நிரப்பு ஒதுக்கீடு ரூபா 100 மில்லியன் தொகையானது சேதன பசளை உற்பத்திற்காக செலவின விடயம் 270-1-1-7-2509 தலைப்பின் கீழ் 2021 செப்டம்பர் 29 ஆந் திகதி கிடைத்திருந்தும் இவ் ஒதுக்கீட்டினை பயன்படுத்துவதற்கு மாவட்ட செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாததன் விளைவாக ஒதுக்கீடு முழுவதும் சேமிப்பாக இருந்தது. இதன் விளைவாக சேதனை பசளை உற்பத்தி செயற்திட்டத்தின் இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை. | சேதனப்பசளை உற்பத்தி, கொள்வனவுகள் சம்மந்தமாக எந்தவொரு திட்ட முன்மொழிவுகளோ வழிகாட்டல்களோ, அறிவுறுத்தல்களோ இண்மையால் இவ் ஒதுக்கீட்டினை பயன்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டது. | வருடத்தினுள் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் ஆக்கபூர்மாக உபயோகப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 05 விடயத்திற்கான மீண்டெழும் செலவு மற்றும் 04 விடயத்திற்கான மூலதனச் செலவு என்பவற்றுக்காக கூட்டுமொத்தம் ரூபா 148,476,069 மீளாய்வாண்டில் ஒதுக்கிடப்பட்டிருந்தும் ரூபா 72,822,446 மாத்திரமே செலவிடப்பட்டதன் விளைவாக ரூபா 75,653,624 தொகை சேமிப்பாக காணப்படுகின்றது. இச் சேமிப்பானது மொத்த செலவு | மீண்டெழும் செலவிற்கான தேவையின் அளவு குறைவாக இருந்ததுடன். மேலும் கடன் வட்டி கொடுப்பனவிற்கான தேவை ஏற்படவில்லை. இங்கு மூலதனச் செலவு எனக் குறிப்பிடப்படுவது கட்டட நிர்மாணமாகும் இதில் உள்ள 90 மில்லியன் ஒதுக்கீட்டில் 40 | வருடத்தினுள் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் ஆக்கபூர்மாக உபயோகப்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒதுக்கீட்டில் 10 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையாக காணப்படுகிறது. இதன் விளைவாக இச்செலவின விடயத்தின் பொருட்டான இலக்குகள் அடையப்பட்டிருக்கவில்லை. | மில்லியன் ஒதுக்கீடு மீளப் பெறப்பட்டது. | |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு**

**-----------------------------------------------------------------------------------------------------------**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 37 அமைச்சுக்களில் மற்றும் 23 திணைக்களங்களில் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுமொத்தம் ரூபா 5,275 மில்லியன் ஏற்பாடுகள் கிடைத்திருந்தது. இவ் ஏற்பாடுகளில் இருந்து மீளாய்வாண்டு இறுதி வரை கூட்டுமொத்தம் ரூபா 3,532 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி ரூபா 1,743 மில்லியன் சேமிப்பாக காணப்படுகின்றது. இதன் விளைவாக குறித்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைபடுத்தப்பட்டிருக்கவில்லை. | 37 அமைச்சுக்களின் ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 1,673,683,424 உம் மற்றும் 23 திணைக்களங்களுக்கான சேமிப்பு ரூபா 69,336,228 ஆகும். | வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்திலின் ஏற்பாட்டு ஒதுக்கங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

--------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நாவிதன்வெளி பிரதேச செயலாளருக்கென அரச விடுதி இருந்தும் இவ் விடுதியில் குடியிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் வாடகை வீடொன்றில் வசிப்பதன் காரணமாக ரூபா 324,000 தொகையை செலவிட நேரிட்டிருந்தது. | எமது செயலக பொறியிலாளரின் களப் பரிசீலனைக்கு உட்படுத்திய போது இவ்விடுதியை திருத்துவதற்கு பாரிய செலவு ஏற்படும் என அவரின் வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. | பிரதேச செயலாளரின் விடுதியினை புணர்நிர்மானம் செய்து வாடகை செலவீனத்தை குறைத்துக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிந்தவூர் பிரதேச செயலகத்தில் இரு கிராம சேவகர் பிரிவில் சௌபாக்கியா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 600,000 பெறுமதியான 1800 கோழிக் குஞ்சுகள் 60 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தும் 24 சத வீதமான ரூபா 282,000 பெறுமதியான 430 கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டு 03 மாதங்களுக்குள் இறந்து காணப்பட்டமையினால் கோழிகளிலிருந்து எதிர்பார்த்த பயனை பயனாளிகளினால் அடையமுடியாதுள்ளது. | கோழிக்குஞ்சுகள் முதற்கட்டமாக வழங்கப்பட்ட காலத்தில் ஏற்பட்ட மழை காலநிலை காரணமாக குஞ்சுகள் இறந்து காணப்பட்டது. | செயற்திட்டங்கள் வெற்றி பெறச் செய்வதற்கு அவை தொடர்பான தொடர் நடவடிக்கை அலுவலகர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.1.2 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கிழக்கு மாகாண விவசாய நீர்ப்பாசன கால்நடை உற்பத்தி அபிவிருத்தி மீன்பிடி கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகித்தலும் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சேதனப் பசளை உற்பத்திக்கான இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 200,000 தொகையானது கல்முனை மற்றும் தமன பிரதேச செயலகங்களுக்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்தும் இச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தின் செயற்திட்டத்தினை ஆரம்பித்து செயற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். | செயற்திட்டங்கள் ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உஹன பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 04 செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 500,000 பெறுமதியான வேலைகளிற்கு ஒப்பந்தகாரர உரிய காலத்தில் வேலையை ஆரம்பிக்காமை என்பவற்றினால் இச் செயற்திட்டங்கள் | உரிய கமநல அமைப்பு கறுப்பு பட்டியலில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட நடவடிக்கைகள் முறையாக மேற்பார்வை செய்யப்பட்டு குறித்த காலத்தினுள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

கைவிடப்பட்டிருந்தன. இதன் விளைவாக குறித்த செயற்திட்டம் தொடர்பான நன்மைகள் பொதுமக்களைச் சென்றடையப்பட்டிருக்கவில்லை.

### 3.1.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உஹண பிரதேச செயலகத்தினால் சௌபாக்கியா செயற்திட்டத்தின் கீழ் மஞ்சள் உற்பத்தி நிலையம் அமைப்பதற்காக ரூபா 1,779,771 தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. இவ் வேலையானது 2021 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைய வேண்டுமென உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும், இக் கட்டிட நிர்மாண வேலையானது 2022 மே 09 வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண பணியினை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் நாட்டில் நிலவிய தொற்று நிலமை இந்த நிலைமைக்கு தாக்கம் செலுத்தியிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகள் குறித்த காலத்தினுள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | உஹண பிரதேச செயலகத்திற்கு ''கம செமஹ பிலிசந்திர'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரச சேவைகளை ஒரே இடத்தில் நிறைவேற்றிக்கொள்வதற்காக குறித்த கட்டிடம் நிர்மாணிப்புக்காக ரூபா 3,326,585 தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்தும் இவ் வேலையானது 2022 மே 09 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | சமுர்த்தி வதிவிட பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் தமண பிரதேச செயலகத்தின் களுகொல்ல கிராமத்தில் மீன் உற்பத்திக்காக 30 மீன்வளரும் நீர்த்தடாகங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,667,600 தொகை மீளாய்வாண்டில் ஒதுக்கிடப்பட்டிருந்ததுடன், இத் திட்டமானது 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைய வேண்டியிருந்தும் 17 மீன்வளரும் நீர்த்தடாகங்கள் 2022 மே மாதம் வரை நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | மிக விரைவில் மீன்வளர்ப்பினை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 3.1.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு சௌபாக்கியா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,175,000 பெறுமதியான உளுந்து தோல் நீக்கும் இயந்திரம் (Black Gram Removing Machine) 2021 திசெம்பர் 30 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் குறித்த இயந்திரத்தின் இயக்கத் தன்மை தொடர்பாக போதிய விளக்கங்கள் உரிய சங்க உறுப்பினர்களிடம் இல்லாமையினால் 2022 மே வரை இவ் இயந்திரத்தினை பயன்படுத்தப்படாமல் உள்ளது. | குறித்த இயந்திரம் நிலை நிறுத்தப்பட்டவுடன் மேற்படி நடைமுறைகள் அனைத்தும் உரிய முறையில் மேற்கொள்ளப்படும். | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் ஆலையடிவேம்பு மற்றும் இறக்காமம் பிரதேச செயலகங்களின் உற்பத்திக் கிராமங்களினை உருவாக்கி மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்காக வேலைத்திட்டத்தில் ஆடுகள் கொள்வனவு, ஆட்டுக் கொட்டகை நிர்மாணம், காப்புறுதி மற்றும் பயிற்சி வழங்குவதற்காக கூட்டுமொத்தம் ரூபா 11,955,340 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், ஆடுகளின் இழப்புகளுக்கு எதிராக காப்புறுதி செய்யப்படாததால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 580,800 பெறுமதியான 294 ஆடுகளில் 46 ஆடுகள் 03 மாதங்களுக்குள் இறந்திருந்தும் இவ் ஆடுகளுக்கு இழப்பீட்டினை பெற முடியாதிருந்ததனால் எதிர்பார்த்த பலாபலனை பயனாளிகளினால் அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | விரைவில் காப்புறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும். | செயற்திட்டங்கள் ஆக்கபூர்வமாக நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.1.5 காலதாமதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இறக்காமம் பிரதேச செயலகத்திற்கு நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை | நாட்டில் ஏற்பட்ட கொவிட் - 19 தொற்று மற்றும் தெருவிளக்கு தூண்களை எவ்விடங்களில் | செயற்திட்டங்கள் உரிய காலத்தினுள் பூர்த்தி செய்யப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் சமூதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சினால் பிரதான வீதியின் சந்திகளில் தெருவிளக்குகளை பொருத்துவதற்காக ரூபா 05 மில்லியன் நிதி ஒதுக்கிடப்பட்டது. எனினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி ரூபா 4,540,900 பெறுமதியான வேலையானது 2021 செப்டம்பர் 24 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2021 நவம்பர் 23 ஆந் திகதி முடிவடைய வேண்டிருந்தும் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைப்பது தொடர்பிலும் இறக்காமம் பிரதேச சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் இறக்காமம் பொதுமக்கள் ஆகியோர் இடையே கருத்து வேறுபாடுகள் தொடர்ச்சியாக காணப்பட்டு வந்தது. | வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்துக்குரிய வாகனமொன்று கடந்த 21 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்வதற்கு கராஜ் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அதனை திருத்துவதற்கு மீளப் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டில் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவ் இடத்திலேயே வைத்து வாகனத்தினை ஏலம் இடப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. | வாகனத்தின் திருத்த வேலைகள் விரைவில் பூர்த்தி செய்து ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தினால் 2019 முதல் 2022 மே மாதம் வரை பயன்படுத்தப்பட்டு பெறப்பட்டிருந்த 43 மோட்டார் சைக்கிள்களை பயன்படுததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படால் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக் களஞ்சிய அறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. | செயலக உத்தியோகத்தர்கள் கோரிக்கை கடிதங்களை தற்போது முன்வைத்துள்ளனர். அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மோட்டார் சைக்கிள்களை ஆக்கபூர்வமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதி வரைக்கும் தெஹித்தகண்டிய, பதியந்தலாவ, மஹாஓயா, தமண, அட்டாளைச்சேனை மற்றும் திருக்கோவில் பிரதேச செயலகங்கள் அமைந்துள்ள காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்று கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | உரிமம் பெற்ற பின்னர் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பிரதேச செயலகங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமத்தைப் பெற்று அக்காணிகளின் பெறுமதி மதிப்பிடப்படல் வேண்டும். |

**3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான சந்தாதிஸ்ஸபுர களஞ்சியம் 2015 செப்டம்பர் 21 ஆந் திகதி திருடர்களால் உடைக்கப்பட்டதனால் ஏற்பட்ட நட்டம் ரூபா 850,738 தொகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 மே 19 ஆந் திகதி வரை தொடர் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | மிக விரைவில் அப்பணியினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | நிதி ஒழுங்குவிதி 104 (4) க்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 முகாமைத்துவ நலிவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | நீண்டகால குத்தகை அடிப்படையில் காணிகள் வழங்கியிருந்தமை தொடர்பில் கல்முனை மற்றும் இறக்காமம் பிரதேச செயலகங்களினால் அறவிடவேண்டிய குத்தகை நிலுவையான கூட்டுமொத்தம் ரூபா 2,863,604 தொகையினை அறவிடுவதற்கு கடந்த 03 வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான இப்பிரச்சினைகள் காரணமாக நீண்ட கால குத்தகை தொகையின் நிலுவையை அறவிடுவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன். | நீண்டகாலமாக உள்ள குத்தகை நிலுவைகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்கு மீளாய்வாண்டில் ரூபா 2.91 மில்லியன் செலவில் கைத்தறிப் பொருட்கள் விற்பனை நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் 2022 மே மாதம் வரை இக் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைத்தறி உற்பத்தியை மேற்கொண்டு உற்பத்தி செய்யும் ஆடைகளை குறித்த நிலையத்தில் வைத்து விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | தமன பிரதேச செயலகத்தின் வட்டினாகல வீதியின் ஒரு பக்கமாக 22 கிலோமீற்றர் தூரத்திற்கு யானை வேலி அமைப்பதற்கு வழி சுத்தப்படுத்தும் வேலைக்கு ரூபா 1,783,066 தொகை வனஜீவராசிகள் திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் ஒதுக்கிடப்பட்டிருந்தது. இவ் வேலை 15 கிலோமீற்றர் தூர வேலைகளுக்கு ரூபா 1,315,645 தொகை ஒப்பந்ததாரருக்கு 2021 ஆகஸ்ட் 24 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன, அதில் வேலைகள் | அளவீட்டு பணிகளை மேற்கொண்டு சரியான அறிக்கையினை தங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையினை மீண்டும் அறவிடப்பட வேண்டும். |

மேற்கொள்ளப்படாத 06 கிலோமீற்றருக்கு ரூபா 526,259 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4. மனித வள முகாமைத்துவம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அங்கிகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 2380 ஆகவும் உள்ளவாறான பதவியணி 2268 ஆகவும் காணப்பட்டமையால் பதவியணியில் காணப்படும் 234 பேரைக் கொண்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 122 பேரைக் கொண்ட மிகைப்பதவியணியினை முறைப்படி அங்கீகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வெற்றிடங்களாக காணப்படுகின்ற சிங்கள பிரதேச செயலகங்களில் சிங்கள மொழிமூலம் சேவையாற்ற கூடிய உத்தியோகத்தர்களுக்குரிய வெற்றிடங்கள் தொடர்ச்சியாக காணப்படுகின்றது. | ஆக்கபூர்வமான பொது மக்கள் சேவைகளை மேற்கொள்வதற்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வெற்றிடமாக காணப்படும் 78 கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாமையினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நிர்வாக நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்படுகின்றது. | கிராம உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வது உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆகும். | கடமைத் தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக் கூடிய சேவைக்காலம் ஒவ்வொரு சேவை நிலையத்திலும் 05 ஆண்டுகள் சேவை புரிந்துள்ள ஒவ்வொரு உத்தியோகத்தரும் வேறு சேவை நிலையங்களில் சேவை புரிவதற்கு இடமளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் மாவட்ட செயலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள 51 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டுகள் முதல் 31 ஆண்டுகள் வரையான காலம் ஒரே சேவை நிலையத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இதுவரை வேறு சேவை நிலையங்களுக்கு இடமாற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒருங்கிணைந்த பணிப்பாளர் நாயகத்தினால் அவ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |